### மாற்றுத் திறனாளிகளுக்கான நடை பாதை ; திருவான்மியூர் கடற்கரையில் விரைவில் திறக்கப்படவுள்ளது !

# நாகை - வேளாங்கண்ணி கடற்கரைகளிலும் அமைத்திட கழக அரசு நடவடிக்கை!

## பெசன்ட் நகர் – ‘எலியட்ஸ்’ கடற்கரையில் திறந்து வைத்து – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை,பிப்.13-

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் பெசன்ட் நகர், எலியட்ஸ் கடற்கரையில் ரூ.1.61கோடி மதிப்பில் மாற்றுத்திறனாளிகளுக்காக அமைக்கப்பட்ட பிரத்யேக மரப்பலகைகளாலான பாதையை திறந்து வைத்து, செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையில் “சென்னைக்கு வெளியே - நாகப்பட்டினம், வேளாங்கண்ணி கடற்கரைகளிலும், மாற்றுத்திறனாளிகளுக்கு மரப்பலகை பாதைகள் அமைக்கப்படும்” என அறிவித்தார்.**

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:**

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசின் சார்பில் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக பல்வேறு முன்னெடுப்புகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம். குறிப்பாக எல்லோருக்கும் எல்லாம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளுக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று நம்முடைய அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாகத்தான் கடந்த 2021 ஆம் ஆண்டு இந்த ஆட்சி அமைந்தவுடன் மாற்றுத்திறனாளிகள் ஒரு கோரிக்கை வைத்தார்கள்.

சென்னை மெரினா கடற்கரையில் மற்றவர்கள் போல மாற்றுத்திறனாளிகளும் கடற்கரைக்கு, கடலுக்கு அருகில் செல்ல வேண்டும், கடல் அலைகளில் தங்களது கால்களை நினைக்க வேண்டும். அதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.



முதலமைச்சர் அவர்களின் கட்டளையை ஏற்று உடனே அந்தப் பணிகளை செய்து முடித்தோம். மாற்றுத்திறனாளிகள் கடலுக்கு அருகில் சென்று கால் நனைக்கும் வகையில் பிரத்தியேக நடைபாதை அமைக்கப்பட்டது. அந்த நடைபாதை அமைக்கப்பட்ட பிறகு ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மாற்றுத்திறனாளிகள் மெரினா கடற்கரையில் கடல் அலைகளில் தங்களின் கால்களை நனைத்து வித்தியாசமான அனுபவத்தை தொடர்ந்து அனுபவித்து வருகின்றார்கள்.

தங்களது மகிழ்ச்சியை எங்களுக்கு வெளிப்படுத்தி வருகின்றார்கள். மெரினாவில் மாற்றுத்திறனாளிகளுக்கு கிடைத்த அந்த அனுபவமும், மகிழ்ச்சியும் பெசன்ட் நகர் கடற்கரை பகுதியிலும் கிடைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். எனவே இங்கேயும் பிரத்தியேக நடைபாதை அமைக்கும் பணிகளை முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கி வைத்தார்கள். சுமார் ஒரு கோடியே 61 லட்சம் செலவில் இந்த நடைபாதை அமைக்கும் பணி துவங்கப்பட்டது.

பணிகள் நடைபெற்ற போதே தொடர்ந்து நானும் அமைச்சர் அவர்களும், மேயர் அவர்களும், அரசு அதிகாரிகளும் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டிருந்தோம்.

ஆறு மாதங்களில் அனைத்து பணிகளும் நிறைவு பெற்று இன்று இந்த பிரத்யேக பாதையை திறந்து வைக்கின்றோம். 190 மீட்டர் நீளமும், 2.80 மீட்டர் அகலமும் கொண்ட இந்த நடைபாதை கடல் அருகே செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

பாதை மட்டுமின்றி, வாகனங்கள் நிறுத்தும் வசதி, சக்கர நாற்காலிகளை நிறுத்தும் வசதியும் செய்யப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளி சகோதர, சகோதரிகள் இந்த வசதிகளை பயன்படுத்திக் கொள்ளுமாறு நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

விரைவிலேயே இது போல திருவான்மியூர் கடற்கரையிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான நடைபாதை அமைக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வரவுள்ளது. அதற்கான டெண்டர் விடப்பட்டுள்ளது. இன்னும் நான்கு, ஐந்து மாதங்களில் அந்த பணிகள் நிறைவடைந்து, அதையும் நாங்கள் திறந்து வைப்போம். அதனைத் தொடர்ந்து சென்னைக்கு வெளியேயும் நாகை மாவட்டத்திலும் வேளாங்கண்ணி கடற்கரையில் இந்த வசதி வேண்டுமென்று கேட்டுள்ளார்கள். இந்த திட்டங்கள் எல்லாம் மாற்றுத்திறனாளிகள் மகிழ்கின்ற வகையிலான அரசாக நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகின்றது என்பதற்கு சாட்சியாக விளங்குகின்றன.

இவ்வாறு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

---

### தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

## நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!



நாள் 11.2.2025

### தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

**1. தமிழ்நாட்டிற்கான கல்வி உதவித்தொகையை உடனடியாக விடுவிக்க வேண்டும்.**

**கனிமொழி கருணாநிதி**



தி.மு.க. நாடாளுமன்றக் கட்சித் தலைவரும் தூத்துக்குடி மக்களவை உறுப்பினருமான கனிமொழி எம்.பி. நேற்று (11.02.2025) மக்களவை நேரமில்லா நேரத்தில் தமிழ்நாட்டிற்கு நிலுவையில் உள்ள சமக்ர சிக்ஷா அபியான் நிதியை உடனடியாக விடுவிக்குமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக, ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்புவரை பயிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வி உதவித் தொகைகளுக்கான வருமான உச்சவரம்பை EWS மாணவர்களை போலவே எட்டு லட்சமாக உயர்த்தவதன் மூலம் விளிம்புநிலை சமூக மக்கள் அதிக அளவில் கல்வி பயில இயலும் என்பதால் ஒன்றிய அரசு அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்பதை விவாதிக்க அவையில் ஒத்திவைப்பு தீர்மானத்தை கனிமொழி எம்.பி அவர்கள் முன்மொழிந்தார்.

**2. மீனவர்களை வஞ்சிக்கும் ஒன்றிய அரசு!**

**டி.ஆர்.பாலு கடுமையாக சாடல்!**

தொடர்ச்சியாக இலங்கை கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுக்கக் கோரி திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் போராட்டம் நடத்தியும், அவையில் குரல் எழுப்பியும் வலியுறுத்தி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக திமுக பொருளாளர் டி. ஆர். பாலு எம்.பி. அவர்கள் ஒன்றிய அரசால் இனி மீனவர்களை காக்க இயலவில்லை என்றால், இரு நாட்டு மீனவர்களும் அவர்கள் பிரச்சினைக்கு அவர்களே தீர்வு காணட்டும் என மக்களவையில் பேசியதன் விவரம் பின்வருமாறு:



தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள மீனவர்களின் துயர நிலையை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உண்மையில், கடந்த 2024 ஆம் ஆண்டில், 528க்கும் மேற்பட்ட சம்பவங்கள் நடந்துள்ளன. இந்த ஆண்டு, 40 நாட்களுக்குள், 77க்கும் மேற்பட்ட சம்பவங்கள் நடந்துள்ளன. இலங்கை கடற்படையின் மீனவர்களை துன்புறுத்தி, அவர்களின் உடைமைகளை எடுத்துக்கொண்டு, அவர்களைக் காவலில் வைத்தது.

இலங்கை கடற்படை எங்கள் கடல் எல்லைக்குள் நுழைந்து மக்களைச் சுட்டுக் கொன்றது. 27 ஆம் தேதி, அவர்கள் இரண்டு மீனவர்களைச் சுட்டுக் கொன்றனர். பிப்ரவரி 8 ஆம் தேதி, அவர்கள் 14 க்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்துள்ளனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதினார்.

இன்னும் 216 மீன்பிடி படகுகளும் 97 மீனவர்களும் இலங்கையின் காவலில் உள்ளனர். இந்திய அரசு எதுவும் செய்யவில்லை. அவர்கள் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் உள்ள இரு மீனவ சமூகங்களும், நவம்பர் 2016 இல் நடந்ததைப் போல, இந்த பிரச்சினையை அவர்களே விவாதித்து முடிக்கு வரும் வகையில் ஏற்பாடு செய்யவேண்டும். ஒன்றிய அரசால் இப்பிரச்சினை தீர்க்க முடியாவிட்டால் இருநாட்டு மீனவர்களும் தாங்களாகவே அதைத் தீர்த்துக் கொள்ளட்டும்.

**3.கோயம்புத்தூரில் எய்ம்ஸ்?!**

**பி.வில்சன்**

அன்றாட கூலியாக பணிபுரியும் பெண்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டங்களை உருவாக்குமாறு தருமபுரி தொகுதி மக்களவை உறுப்பினர் அ. மணி நாடாளுமன்ற கேள்வி நேரத்தில் வலியுறுத்தியுள்ளார். அதில் அவர் அன்றாடம் கூலி பெறும் பெண்களுக்கு ஊதிய ஏற்றத்தாழ்வுகளை தடுக்கவும் பணியிடப் பாதுகாப்பை உறுதி செய்யவும் அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.



**4. முத்ரா கடன் முழுமையாக பயன் தருவதை உறுதி செய்க**

**இரா.கிரிராஜன்**



முத்ரா கடன் திட்டத்தின் (PMMY) வரம்பை அரசாங்கம் 20 லட்சமாக உயர்த்திய பிறகு தமிழ்நாட்டில் சிறு மற்றும் குறு தொழில்களுக்கான மூலதன நிதி எளிதாக கிடைக்கப் பெறுவதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும் என திமுக மாநிலங்கலவை உறுப்பினர் ஆர். கிரிராஜன் வலியுறுத்தியுள்ளார்.

அதில் அவர் தமிழ்நாட்டில் முத்ரா கடந்திட்டத்தின்கீழ் பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை, 2022, 2023, 202324 மற்றும் 202425ஆம் ஆண்டுகளில் ஷிஷு, கிஷோர், தருண் மற்றும் தருண் பிளஸ் பிரிவுகளின் கீழ் வழுங்கப்பட்ட தொகைகளின் விவரங்கள்,

முத்ரா கடன் திட்டத்தின் கீழ் பெண்கள் மற்றும் சிறுபான்மையினர் தொழில்முனைவோரை திறம்பட சென்றடைவதை உறுதி செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் மற்றும் கடன் பாதுகாப்பை மேம்படுத்த மைக்ரோ யூனிட்களுக்கான கடன் உத்தரவாத நிதி (CGFMU) எவ்வாறு பங்களித்துள்ளது போன்ற விவரங்களை வெளியிடுமாறு கேட்டுள்ளார்.

---



அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றிய பள்ளிகளில் பயிலும் 10, 11, மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ – மாணவிகளுக்கு, “தேர்வை வெல்வோம்”, “வழிகாட்டி வினா விடை தொகுப்பினை தனது சொந்த செலவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர் கலந்துகொண்டனர்.

---

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. முன்னாள் அவைத் தலைவர்

## த.வேணுகோபால் நினைவிடம் திறப்பு நினைவேந்தல்!

### நினைவிடத்தை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைக்கிறார்!

*திருவண்ணாமலை, பிப். 13-*

திருவண்ணாமலை மாவட்ட திமுக முன்னாள் அவைத்தலைவரும், முன்னாள் நடாளுமன்ற உறுப்பினருமான த.வேணு கோபால் அவர்களின் நினைவிடம் திறப்பு மற்றும் முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. நினைவிடத்தை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்துகிறார்.

15.02.2025 சனிக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு, திருவண்ணாமலை ஒன்றியம், காட்டாம்பூண்டி ஊராட்சியில் திருவண்ணாமலை மாவட்ட திமுக முன்னாள் அவைத்தலைவரும், முன்னாள் நடாளுமன்ற உறுப்பினருமான த.வேணு கோபால் அவர்களின் நினைவிடம் திறப்பு மற்றும் முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சிக்கு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, தலைமை வகிக்கிறார்.

வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் க.தேவராஜ், கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளு மன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி, அ.நல்லதம்பி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.எஸ்.விஜயகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜயரங்கன், விஜய லட்சுமிரமேஷ், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க. சௌந்தர ராசன், சிவஜெயராஜ், நகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன், பொதுகுழு உறுப்பினர் சு.அரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், பொதுப்பணி துறை அமைச்சருமான எ.வ. வேலு நினைவிடத்தை திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்துகிறார்.

நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட அவைத் தலைவர் இரா.இராஜசேகர், ஆர்.சிவானந்தம், கே.ஆர். சீத்தாபதி, ஆர்.வேல்முருகன், கே.வி.ராஜ்குமார், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் வ.அன்பழகன், வடக்கு மாவட்ட துணை செயலாளர்கள் என்.பாண்டுரங்கன், க.லோகநாதன், ஜெயராணிரவி, மாவட்ட பொருளாளர் டி.ஏ.தட்சணாமூர்த்தி.

தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ.மெய்கண்டன், ஏ.ஏ.ஆறுமுகம், ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், பொன். தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு.கணேஷ், விஜி(எ) எஸ். விஜயராஜ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர். எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், கற்பகம்சரவணன், உ.நித்யா, வடக்கு மாவட்டம். எவரெஸ்ட் ந.நரேஷ்குமார், மா.ஏழுமலை, என்.கே.ஏ.பாபு, இ.எஸ். டி.கார்த்திகேயன், கே.ஏ.புஷ்பராஜ், டாக்டர் மகேந்திரன், ஜி.பி. அசோக், பி.எஸ்.சாந்தகுமார், ப.மணிகண்டன், இ.பிச்சைகண்ணு, பி.செல்வராஜன், ஏ.எம்.சம்பத், அமானுல்லா, இ.மணிகண்டன், தொ.ப.சீ.மதிவாணன், சாது.ஆனந்த், அப்சல்பாஷா, ப.க. மணிவண்ணன், ஆர்.ராம்ரவி, இப்ராஹிம் ஷெரீப், மாலினிவினோத் திவாகரன், இராணிவெங்கடேசன்.

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு. பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா. ராஜேந்திரன், ஆர்.வி. சேகர், கி.ஆறுமுகம், பா. ராமஜெயம், த. செந்தில்குமார், அ.ஏழுமலை, த. மனோகரன்,

வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் கே.வி. சேகரன், அ.சுப்பிர மணியன், பி.மனோகரன், ஏ. எழில்மாறன், கே.டி.ராமசாமி, என்.டி.மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம். சுந்தர், எஸ்.மோகன், து. மாமது, ஏ.ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ. ஜி.திராவிடமுருகன், எஸ். ரவிக்குமார், கே.பி.ஆர். பி.பழனி, சி.ஆர்.பெருமாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன்,

தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.சி.வி.தயாநிதி, ஏ.எம்.காசி, எம். கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர்.வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்தகுமார், அப்சர்லியாகத்பாஷா,

தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி. வெங்கடேசன், டி.கே. மோகன், கே. கோவர்தணன், வேணிஏழுமலை மற்றும் மாநகராட்சி மேயர் நிர்மலா வேல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம், நகர மன்ற தலைவர், எச்,ஜலால், பேரூராட்சி தலைவர்கள் கோ. சரவணன், கௌரி நடராஜ், செல்வபாரதி மனோஜ்குமார், இராணி சண்முகம், கே.டி.ஆர். பழனி, சுதா முருகன், மகாலாட்சுமி கோவர்த்தனன், ராதாஜெகவீரபாண்டியன் உட்பட ஏரளமானோர் கலந்து கொள்கின்றனர்.

நினைவிட திறப்பு ஏற்பாட்டினை மாவட்ட அவைத்தலைவர் கோ.கண்ணன் செய்துவருகிறார்.

---

## தமிழ்நாடு முழுக்க தி.மு.க.விற்கு ஆதரவான சூழலே நிலவுகிறது!

### அமைச்சர் செந்தில் பாலாஜி எக்ஸ்தளப் பதிவு!

*சென்னை, பிப். 13-*

தமிழ்நாடு முழுக்க தி.மு.க.விற்கு ஆதரவான சூழலே நிலவுகிறது; எனவும் “Pro Incumbency” தான் எங்கும் எதிரொலிக்கிறது எனவும் மின்சாரத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-



நடந்து முடிந்த ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தல், மக்கள் நலனுக்காக அனுதினமும் உழைத்து வரும் முதலமைச்சர் அவர்களின் உழைப்பிற்கும், திராவிட மாடல் அரசுக்கும், பெரியாரை இகழ்ந்து அரசியல் செய்ய நினைத்த அற்பபதர்களை ஓடவிட்ட தமிழ்நாட்டு மக்களுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி!

குரங்கு கையில் சிக்கிய பூமாலையாய் தன் கைக்கு கிடைத்த கட்சியை சீரழித்து சின்னாபின்னமாக்கி தோல்வி மேல் தோல்வி கண்டு தோல்விசாமி அவர்கள் இல்லாத பொய்களை வீசுவதே அன்றாட அலுவலாக வைத்திருக்கிறார். அதனால்தான் மக்களை சந்திக்க முடியாமலும் தி.மு.கழகத்தை எதிர்க்க துணிவில்லாமல் தேர்தலை சந்திக்காமல் ஓடி ஒளிந்து கொண்டார்.

வாக்களித்த மக்களுக்கு மட்டுமல்லாமல் வாக்களிக்காத மக்களின் நலனுக்காகவும் இந்த அரசு பாடுபடும் என அறிவித்து செயல்பட்டார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்; அதன் காரணமாக இன்று ஈரோடு கிழக்கில் அ.தி.மு.க. வாக்குகள் அனைத்தும் திமுக விற்கு வந்துள்ளது.

தமிழ்நாடு முழுக்க தி.மு.க.விற்கு ஆதரவான சூழலே நிலவுகிறது; “Pro Incumbency” தான் எங்கும் எதிரொலிக்கிறது. முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களின் அலைதான் தமிழ்நாடு முழுக்க அடித்துக் கொண்டிருகிறது. இது 2026 தேர்தலிலும் எதிரொலிக்கும்!

இவ்வாறு தெரிவித்துள்ளார்.